**DEPOSITION OF WITNESS**

**In the court of Sub Court, Eraniel**

**S.C.No.265/2022**

**Prosecution Witness – PW 2**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பெருமாள் பிள்ளை |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.11.2025.

(Accused Present).

முதல் விசாரணை–

நான் கீழகருப்புகோட்டில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ரவீந்திரன் மகன் ஜெயகுமாரை எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

கடந்த 25.09.2015 அன்று 20 மணிக்கு நானும், சுங்கான்கடை ரவீந்திரன் மகன் ஜெயகுமார் என்பவரும் கீழகருப்புகோடு விலக்கில் நின்றபோது, இரணியல் காவல் நிலைய பொறுப்பில் உள்ள குளச்சல் காவல் நிலைய ஆய்வாளர் கூப்பிட்டதற்கு இணங்க நாங்கள் சென்றோம், மேற்படி காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் டார்ச் லைட் வெளிச்சத்தில் குற்ற எண்.710/2015 குற்ற பிரிவு 147, 294 பி, 324, 307, 506(2) இதச வழக்கில் சம்பவ இடமான நுள்ளியரை வயலும் அதனை சுற்றியுள்ள இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும் , அதில் நானும் ஜெயகுமார் என்பவரும்

கையொப்பம் செய்து விட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக அவர்களுடன் சுமூகமான நிலையில் இருப்பதினால், உண்மையை மறைத்து தவறதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**